மாண்புமிகு திரு. எம். முத்துசாமி: போட்டு நான்கைந்து நாட்களில் fuse ஆக வேண்டுமென்ற தேவையில்லை. அப்படிப்பட்ட நிலையிருக்காது. பல்புகள் பற்றுக்குறை இருக்கிறது என்பதைப் பற்றி பல புகார்கள் அரசுக்கு வந்ததன் பேரில் மின்சார வாரிய தலைமைப் பொறியாளரிடத்தில் கலந்து பேசப்பட்டது. அதன்படி நகராட்சி மன்றங்களில் அப்படித் தேவையேற்பட்டால் வாரியத்தின் மூலமாக கொடுக்கலாம். அத்துடன் நகராட்சி மன்றங்களில் பல்புகளை வாங்கி இருப்பில் வைத்துக் கொண்டு தேவைப்படும்போது மின்சார வாரியத்தின் மூலமாகப் பயன்படுத்தலாம் என்றும் வைக்கப்பட்டது. அதைப்போல மின்சார வாரியம் ஊராட்சி மன்றங்களுக்கும் கொடுக்கமுடியுமா என்று கிராம வளர்ச்சி இயக்குனரை ஆலோசனை கேட்டபொழுது கொடுக்கலாம் என்று கூறினார்கள். மின்சார வாரிய செயலாளருக்கு எழுதப்பட்டு இருக்கிறது. பதில் வந்த பிறகு அந்தக் குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

Elementary School, Thiruvenganur

* 351 *Q.*—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the plan and estimated expenditure of the building under construction for Elementary School in Thiruvenganur Village of Thirumanur Panchayat Union?

ஆரம்பப் பள்ளி, திருவெங்கனூர்

திரு. டி. கே. சுப்பையா : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

திருமானூர் பஞ்சாயத்து ஒன்றிப்பிலுள்ள திருவெங்கனூர் கிராமத்தில், ஆரம்ப பள்ளிக்காகக் கட்டப்படும் கட்டிடம், எந்த திட்டத்தில் எவ்வளவு தொகையில் கட்டப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : திருமானூர் பஞ்சாயத்து ஒன்றிப்பிலுள்ள திருவெங்கனூர் கிராமத்தில் ஆரம்பப் பள்ளிக்காக கட்டப்படும் கட்டிடம், கிராமப் பணிகள் திட்டத்தின்கீழ் ரூபாய் 10,000 மதிப்பீட்டில் கட்டப்படுகிறது.

திரு. டி. கே. சுப்பையா : கிராமப் பணித் திட்டம் என்பதிலிருந்து அது பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து அல்லது மானியத்திலிருந்து கட்டப்பட்டதா அல்லது சீரணிப்படை நிதியிலிருந்து அந்தப் பள்ளி கட்டப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : ஏற்கனவே கேள்விக்குக் கொடுத்த பதிலில் திருமானூர் பஞ்சாயத்து ஒன்றிப்பிலுள்ள திருவெங்கனூர் கிராமத்தில் ஆரம்பப் பள்ளிக்காக கட்டப்படும் கட்டிடம் கிராமப் பணிகள் திட்டத்தின் கீழ் 10,000 மதிப்பீட்டில் கட்டப்படுகிறது என்றுதான் இருக்கிறது. சீரணியின் மூலமாக என்று இல்லை. கிராமப் பணி மூலமாகக் கட்டப்படுவதற்கு ரூ. 4,000 அரசாங்கம் வழங்குகிறது. மீதி ரூ. 6,000-ஐ அந்தப் பகுதியிலுள்ள பொது மக்கள் நன்கொடையாக வழங்கி கட்டிடத்தைக் கட்ட வேண்டும். ஒரு வேளை கட்டுவதற்கு சீரணியினரைப் பயன்படுத்தியிருந்தால் இருக்கலாம். அதைப்பற்றிய விவரம் இல்லை. கட்டிடம் முடியும் நிலையில் இருக்கிறது.

Tamil Nadu Power-loom Weavers' Association

* 352 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the Government have received any representation from the Tamil Nadu Power-loom Weavers' Association, recently; and

(*b*) if so, the action taken thereon?